திருவான்மியூர் சென்னை மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பார்வையிட்டு, சிகிச்சைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் ஜே.எம்.எச்.அசன் மௌலானா எம்.எல்.ஏ., உயர் அதிகாரி டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், கவுன்சிலர்கள் க.விசாலாட்சி துரைகபிலன், து.சுபாஷினி, ம.ராதிகா, ஜெ.கயல்விழி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

"நலம் காக்கும் ஸ்டாலின்" – தமிழ்நாடு முழுவதும் 260 முகாம்கள்!

இதுவரை 4,03,119 பேர் பயன் பெற்றுள்ளனர்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, அக்.1-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.09.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அடையாறு மண்டலத்திற்குட்பட்ட திருவான்மியூர் சென்னை மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முழுவதும் இன்று 35 இடங்களில் "நலம் காக்கும் ஸ்டாலின்" முகாம்கள் நடைபெற்றது. முதலமைச்சர் அவர்களால் 02.08.2025 அன்று சென்னை, சாந்தோம் செயன்பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இம்முகாம்கள் 388 வட்டாரங்களில் 1,164 முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் 20 முகாம்கள், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 57 முகாம்கள் என ஆக மொத்தம் 1,256 முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் 02.08.2025 அன்று 38 முகாம்கள் நடத்தப்பட்டு 44,795 பேரும் 09.08.2025 அன்று 36 முகாம்கள் நடத்தப்பட்டு 48,046 பேரும் 23.08.2025 அன்று 38 முகாம்கள் நடத்தப்பட்டு 56,347 பேரும், 30.08.2025 அன்று 38 முகாம்கள் நடத்தப்பட்டு 57,082 பேரும், 06.09.2025 அன்று 35 முகாம்கள் நடத்தப்பட்டு 54,370 பேரும், 13.09.2025 அன்று 38 முகாம்கள் நடத்தப்பட்டு 74,114 பேரும், 20.09.2025 அன்று 37 முகாம்கள் நடத்தப்பட்டு 68,365 பேர் என ஆக மொத்தம் 260 முகாம்கள் நடத்தப்பட்டு 4,03,119 பேர் பயன்பெற்றுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" முகாம் 02.08.2025 அன்று நடத்தப்பட்டு 2,934 பேரும், 23.08.2025 அன்று நடைபெற்ற முகாமில் 960 பேரும், 30.08.2025 அன்று நடத்தப்பட்ட முகாமில் 1,471 பேரும், 13.09.2025 அன்று நடத்தப்பட்ட முகாமில் 6,605 பேர் என ஆக மொத்தம் 4 முகாம்கள் நடத்தப்பட்டு 11,970 பேர் பயன் பெற்றுள்ளனர்.

நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் கடந்த வாரம் வரை 260 முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 4,03,119 பேர் பயன்பெற்றுள்ளனர். இம் முகாமில் சிறப்பு மருத்துவ சேவைகளாக பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம்,எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்க வியல் மருத்துவம்,பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்தியமுறை மருத்துவம் ஆகிய மருத்துவ சேவைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இணைச் சேவைகளாக அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் முழு உடல் பரிசோதனைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தல் போன்ற சேவைகள் இம்முகாமில் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இன்று (30.09.2025) மாலை 06 மணி நிலவரப்படி தமிழ்நாடு முழுவதும் 35 முகாம்கள் நடத்தப்பட்டு 60,634 பேர் பயன்பெற்றுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே. எம்.எச்.அசன் மௌலானா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. க. விசாலாட்சி துரைகபிலன், திருமதி.து.சுபாஷினி, திருமதி.ம.ராதிகா, திருமதி. ஜெ.கயல்விழி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கடலூர் மாவட்டம், நல்லூர் ஒன்றியம், சிறுமங்கலம் ஊராட்சியில் ரூபாய். 16.45 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையம் கட்டிடத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தார். இதில் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக

சிறப்பாக பணிபுரிந்தவர்கள் - நிறுவனங்களுக்கு விருதுகள்!

உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று முதல்வர் வழங்குகிறார்!

சென்னை, அக்.1-

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்கள் / நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் மாநில விருதுகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 3.12.2025 உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படவுள்ளது.

1. சிறந்த பணியாளர் / சுயதொழில் புரிபவர்

1. கை, கால் பாதிக்கப்பட்டோர் (LD) அல்லது தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் (LC), 2. பார்வை திறன் பாதிக்கப்பட்டோர்(VI),

3. செவித் திறன் பாதிக்கப்பட்டோர் (HI),

4. அறிவுசார் குறைபாடுடையோர் (ID),

5. பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு (SpLaD),

6. Developmental Disorder (புறவுலக சிந்தனையற்றோர்(ASD), குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு (SLD)],

7. மன நோய் (MI),

8. Disability caused due to blood disorder

இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு (He), இரத்த அழிவுச் சோகை (Th), அரிவாளனு இரத்தச் சோகை (SCD)],

9. நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு திசு பண்முகக் கடினமாதல் (MS), நடுக்கவாதம் (PD)], 10. பல்வகை குறைபாடு [Multiple Disabilities(MD)]

10 விருதுகள் - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

2 . ஹெலன் கெல்லர் விருது (பார்வைத் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்கள் - தலா ஒரு விருது) - 2 விருதுகள் - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

3. சிறந்த ஆசிரியர் - (அறிவுசார் குறைபாடுடையோருக்கு கற்பித்தல்) 1 விருது -10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

4. சிறந்த சமூகப் பணியாளர் - 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

5. மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் - 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

6. மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம்- 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

7. ஹெலன் கெல்லர் விருது ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிலும் செவித் திறன் குறையுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர் - 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

8. ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (அறிவுசார் குறைபாடுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்) - 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

9. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் - 2 விருதுகள் - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

10. பொதுக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற கட்டமைப்புகளை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் - 2 விருதுகள் - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

மொத்தம் 22 விருதுகள். மேற்காணும் விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் விருதாளர்கள், https://awards.tn.gov.in என்ற வலைத்தளத்தில் 26.10.2025 அன்று பிற்பகல் 5.00 மணிக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. வலைத்தளத்தில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், விண்ணப்பத்தின் இரண்டு நகல்களை 26.10.2025 அன்று பிற்பகல் 5.00 மணிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவிகித இட ஒதுக்கீடு அரசாணை வெளியீடு!

சென்னை, அக்.11-

தமிழ்நாடு அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இந்நிலையில், இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு நேற்று அரசாணையை வெளியிட்டுள்ளது. அதில், மாற்றுத்திறனாளிகள் பணிபுரிவதற்கான ஏற்ற பதவிகள் குறித்த தகவல் வெளியிடப் பட்டுள்ளது. ஏ,பி,சி,டி என்று நான்கு நிலைகளிலும் 119 பதவிகள் மாற்றத்திறனாளிகளுக்கு ஏற்ற பதவிகள் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இயற்கை வளங்கள் துறையில் மேலாளர், துணை மேலாளர், அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ள நூலகங் களில் நூலகர் பணியிடங்கள், சட்டப்பேரவையில் உதவியாளர் பணியிடங்கள், உணவு மற்றும் நுகர்வோர் பாது காப்புத் துறையில் கிடங்கு மேலாளர், துணை கிடங்கு மேலாளர் மற்றும் உதவியாளர்கள், போக்குவரத்துத்துறையில் நடத்துனர், ஓட்டுநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையில் சாலை ஆய்வாளர், உணவு பாதுகாப்புத்துறையில் உணவு பாதுகாப்பு அதிகாரி, தமிழ்நாடு எரிசக்தித்துறையில் மருத்துவ அதிகாரி, தட்டச்சர், அலுவலக உதவியாளர் என 119 பதவிகள் மாற்றுத்திறனாளிகள் பணிபுரிவதற்கான ஏற்ற பதவியிடங்கள் என்று அரசாணையில் தெரி விக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு காவல்துறைக்காக – முன்னாள்

இராணுவப்படை வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு!

அரசின் செய்திக் குறிப்பில் தகவல்!

சென்னை, அக்.1

தமிழ்நாடு காவல்துறைக்காக வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்யும் திறன் கொண்ட முன்னாள் இராணுவ வீரர்கள் / முன்னாள் துணை இராணுவப்படை வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தமிழ்நாடு காவல்துறையின் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்க பிரிவுகளில் பின்வரும் பதவிகளில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் (தேவைப்பட்டால் நீட்டிக்கப்படலாம்) பணிபுரிய முன்னாள் இராணுவ வீரர்கள் / முன்னாள் துணை இராணுவப்படை வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

(i) ஆய்வாளர் (BDDS) முன்னாள் சுபேதார்/ சுபேதார் மேஜர் - 2 காலியிடங்கள். ஊதிய அளவு - 37,700 1,19,500

(ii) உதவி ஆய்வாளர் (BDDS) முன்னாள் நாயிப் சுபேதார் - 14 காலியிடங்கள்.

ஊதிய அளவு - 36,900 1,16,600

(iii) தலைமை காவலர் (BDDS) முன்னாள் ஹவில்தார்/ நாயக் 43 காலியிடங்கள். ஊதிய அளவு - 20,600 65,500

விண்ணப்பதாரர்கள் பின்வரும் அளவுகோல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

வயது 01.07.2025 நாளன்று 50 வயதுக்குக் கீழுள்ளவர்கள், கல்வித் தகுதி குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி அல்லது அதற்கு சமமான தேர்ச்சி, தொழில் நுட்ப தகுதி CME, புனே அல்லது NSG அல்லது BCAS ஆல் நடத்தப்படும், குறைந்தபட்சம், 6 வார BDD படிப்பில் தகுதி பெற்றிருக்க வேண்டும், அனுபவம் - இராணுவம் அல்லது துணை ராணுவப் படைகளில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணி அனுபவம் மற்றும் இந்திய ராணுவத்தின் 261 அல்லது 262 CED பிரிவு அல்லது CME இன் EDD பிரிவு அல்லது NSG இன் BD பிரிவு அல்லது தேசிய வெடிகுண்டு தரவு மையம்NBDC அல்லது விமான நிலையங்களின் BD பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் நல்ல திறன் மற்றும் நடைமுறை அனுபவம் மற்றும் களப் பொறியியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில், தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் BDD யை பற்றி பயிற்சி அளிக்கும் திறன் மற்றும் மருத்துவ தகுதி SHAPEI.

தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சுயவிவரங்கள் (Bio data) மற்றும் கல்விச் சான்றிதழ்கள், டிஸ்சார்ஜ் புத்தகத்தின் தேவையான பக்கங்கள், ஓய்வூதிய ஆணை, BDD தொடர்பான படிப்பு/அனுபவச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நகல்களுடன் கூடுதல் காவல் துறை இயக்குநர், செயலாக்கம், மருதம், எண்.17, போட் கிளப் சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028 என்ற முகவரிக்கு 31.10.2025 க்கு முன் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே தனிப்பட்ட அழைப்பு கடிதங்கள் மூலம் தேர்வு சோதனைகளுக்கு (சான்றிதழ் சரிபார்ப்பு, எழுத்து மற்றும் நடைமுறை தேர்வுகள் போன்றவை) அழைக்கப்படுவார்கள். இந்த ஆட்சேர்ப்பு, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

புனிததோமையர்மலை வடக்கு ஒன்றியம், முடிச்சூர் ஊராட்சி திமுக சார்பில் கழக செயல்வீரர் கூட்டம் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில், எழும்பூர் 99வது வார்டு மாமன்ற உறுப்பினர், தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி முன்னிலையில், ஜி.கே. ரவி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எதிர்கொள்ள இருக்கிற 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், மற்றும் ஊராட்சியில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து ஆலோசிக்கப்பட்டது, உடன் ஒன்றிய துணைச் செயலாளர் ஊராட்சித் துணைத் தலைவர் விநாயக மூர்த்தி, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 – 11வது வார்டில் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி,உதவி செயற் பொறியாளர் இ. சத்தியசீலன்,சுகாதார அலுவலர் மாரிமுத்து ஆகியோர் கள ஆய்வு மேற்கொண்டார்கள். இதில் வட்டக் கழக செயலாளர், மாவட்ட,மாநகர, பகுதி, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், மற்றும் ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

பூவிருந்தவல்லி தொகுதிக்குட்பட்ட திருவூர் ஊராட்சி பகுதியில் அரசு மாதிரி உயர்நிலைப் பள்ளியில் 1.19 கோடி மதிப்பீட்டில் கூடுதல் 2100 சதுரடி பரப்பளவு கொண்ட 3 கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணியை ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து காலை சிற்றுண்டி வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம்ஆனந்த், அலுவலர் செல்வகுமார், நிர்வாகிகள் மு.ராஜா, ஆர்.திலீப்ராஜ், தலைமையாசிரியர் ச.மலர்கொடி கிளை செயலாளர்கள் சுபாஸ், தாமரைசெல்வம், வளர்மதி, சுந்தர்(எ)துரைராஜ், ராதாகிருஷ்ணன், ரூபி, வினோத்குமார், சிபி,சதீஷ், ஹமாநாத், ரோமாரியோ, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் நகரக் கழகத்தின் அவைத் தலைவராகவும், திருவொற்றியூர் நகராட்சியில் மூன்று முறை நகர மன்ற உறுப்பினராக இருந்து மக்கள் பணியாற்றியவரும், மீசைக்காரர் என்று தலைவர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்ட கே.பரசுராமன் நினைவு தினத்தை முன்னிட்டு கே.வி.கே . நகரில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் கே.பரசுராமன் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் எஸ்.குறிஞ்சி கணேசன், தலைமைப் பொது குழு உறுப்பினர் இரா.முருகேசன், வட்ட செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் எம்.சி., ஆர்.சி.ஆசைத்தம்பி, பழவேற்காடு அளவி பாய், தலைமைக் கழக பேச்சாளர்கள் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, வா.கருணாநிதிஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். நிகழ்ச்சியில் ராயபுரம் சு.சேகர், ஏகா.கார்த்திகேயன், குட்டி (எ) எத்திராஜ், வி.கே.ஏழுமலை, எம்.எஸ்.நாகலிங்கம், கி.ராஜவேல், கோவிந்தராஜ், கோபால், எம்.எஸ். பாண்டியன் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.